10/=

பக்கங்கள் 04

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 24 சனிக்கிழமை மே 27 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



## இன்றும் மீட்பில் ஹெலிகள்

நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவுகள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களை மீட்கும் பணிகளில் இன்றைய தினமும் ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டுள்ளன.

கொக்கல இராணுவ முகாமில் இருந்து மூன்று ஹெலிகொப்டர்களும், விமானப் படை முகாமில் இருந்து எம்.ஐ. 17 ரக ஹெலிகொப்டரும் மீட்பு பணிகளில் இன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் கிகான் செனவிரத்ன கூறினார்.(அ)

## இந்திய நிவாரண கப்பல் வந்தது



வெள்ளம் மற்றும் மண் சரிவினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உதவும் முகமாக இந்தியாவின் நிவாரணக் கப்பல் ஒன்று இன்று காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இன்னொரு நிவாரணக்கப்பல் நாளை வந்து சேரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக நிவாரண பொருட்களுடன் இந்தியா 2 கப்பல்களை அனுப்ப உள்ளதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(அ)

## அடை மழைபெய்யும் அபாய எச்சரிக்கை!

நாட்டின் தென் மாகாணங்கள் உள்ளிட்ட ஏனைய மாகாணங்களில் எதிர்வரும் 29ம் 30ம் திகதிகளில் மீண்டும் அடைமழை பெய்யலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. தற்போது மழையுடன் கூடிய காலநிலை தற்சமயம் குறைவடைந்துள்ளது. இதனால் மீட்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் அடை மழை பெய்யக்கூடிய சாத்தியம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஐ.நாவுக்கு அழைப்பு

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வருமாறு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாடுகளிடம் இலங்கை அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. விசேடமாக தேடுதல் மற்றும் மீட்பு பணிகளுக்கான உதவிகளை வழங்குமாறே வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)

# மூழ்குமா நாடாளுமன்றம்?



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நியவன்னா ஓயவின் நீர்மட்டம் வேகமாக உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக நாடாளுமன்றம் நீரில் மூழ்கும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. நியவன்னா ஓயவின் நீர் நாடாளுமன்றத்தை மூடினால் அதனை தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் பாதுகாப்பு பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பலி 100+



கடந்த 24 மணித்தியாலமாக இலங்கையை ஆட்டிப்படைக்கும் இயற்கைப் பேரிடர் காரணமாகப் பலியானோரின் எண்ணிக்கை 100 ஐ தாண்டியுள்ளது. அத்துடன் 300க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். 500 பேர் வரையில் காணாமல் போயுள்ளனர். சுனாமிக்குப் பின்னர் இதுவே

04

## வந்தார் மைத்திரி



3 நாள் உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த இலங்கை ஜனாதிபதி மைத்திரி நேற்றிரவு நாடு திரும்பினார்.

இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அவர் இன்று நேரில் சென்று பார்வையிடுவார் என்றும் கூறப்படுகிறது. (அ)

## ரயிலுக்கு கல்வீச்சு: சிப்பாய் காயம்
### நாவற்குழியில் சம்பவம்



யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்தின் மீது இன்று காலை மேற்கொள்ளப்பட்ட கல்வீச்சு தாக்குதலில் சிப்பாய் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

குறித்த புகையிரதத்தின் மீது இனம் தெரியாத இளைஞர்கள் சிலரால் நாவற்குழி பிரதேசத்தில் வைத்து கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த தாக்குதலின் போதே மகேஷ் என்ற சிப்பாயே படுகாயம் அடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.(அ)

## மாத்தறை மக்களை வெளியேற உத்தரவு

நில்வள கங்கையின் நீர் மட்டம் அதிகரித்துக் கொண்டிருப்பதால் மாத்தறை நகரத்தை அண்மித்து இருக்கும் மக்களை உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. பண்டத்தர, வெலேவத்தை, மெத்தவத்தை, உயன்வத்தை மற்றும் நாதுகல ஆகிய பிரதேசங்கள் நீரில் மூழ்கும் அபாயம் இருப்பதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் லுதினல் கேர்ணல் பிரியங்கர உதேஷ் குணவர்தன கூறினார். (எ)

## குடிநீர்த் திட்டம் திறப்பு



கிளிநொச்சியில், வடமாகாண முதலமைச்சரின் அமைச்சினால் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் அமைக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் இன்று காலை 11.30 மணியளவில் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள சுமார் 150 குடும்பங்களின் பாவனைக்காகவே இந்த குடிநீர்த் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வட மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## "போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடருங்கள்"

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது குற்றமிழைத்தவர்களை ஊக்குவிப்பதற்கு மாறாக அவர்களுக்கு எதிராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழக்கு தொடர வேண்டும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் வலியுறுத்தியுள்ளது.

குறித்த அமைப்பினால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "ஹெய்ட்டியில் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை அரச படையினர் பாலியல் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை, யுத்தக் குற்றச்செயல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட மேஜர் ஜெனரல் ஜகத் டயஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்க முடியாது" என அவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மீன் சூகா தெரிவித்துள்ளார். (எ)

# கறுப்புப் பணம் ஏழைகளிடம் வரும்



ஊழல்வாதிகளிடமிருந்து கைப்பற்றப்படும் கறுப்புப் பணம் ஏழைகளிடம் வந்து சேரும் என இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

அசாம் மாநிலத்தில் நடந்த பா.ஜ., அரசின் 3 ஆண்டு நிறைவு விழா கொண்டாட்டத்திலேயே மோடி இதனைத் தெரிவித்தார்.

“ஊழலுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக நான் பல பிரச்சினைகளை சந்திக்க வேண்டி இருக்கும். அதற்காக பயப்படப்போவதில்லை. மக்களிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவேன். அதிலிருந்து பின்வாங்க மாட்டேன். இந்த ஆட்சியில் மக்கள் நேர்மையாக மகிழ்ச்சியாகவும், நலமுடனும் உள்ளனர்” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# பொதுவானவரை நிறுத்த முடிவு



காங்கிரஸ் தலைவர், சோனியா தலைமையில், 17 எதிர்க்கட்சித் தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில், “ஜனாதிபதித் தேர்தலில், பொது வேட்பாளரை நிறுத்துவது” என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில், ஏகமனதாக வேட்பாளரைத் தெரிவு செய்வதில், கருத்து வேறுபாடு ஏற்பட்டால், தீர்வு காண, குழு அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் பதவிக்காலம் ஜூலை 25ஆம் திகதி முடிவதால், புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்ய, ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் இடையே கடும் போட்டி நிலவிவரும் நிலையிலேயே நேற்றையதினம் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

# “அப்பாவிகளை கொல்லுங்கள்”



## ரம்ழான் பரிசாகக் கொடுங்கள்: ஐ.எஸ். அதிர்ச்சி வீடியோ

ரம்ழான் மாதம் தொடங்கியுள்ள நிலையில் பொது மக்கள் மற்றும் அப்பாவிகள் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என தனது இயக்கத்தினருக்கு ஐ.எஸ். அமைப்பு வீடியோ மூலம் தகவல் தெரிவித்துள்ளது.

பிரிட்டனின் மான்செஸ்டர் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை பொலிஸார் கைது செய்துள்ள நிலையில், தற்போது ஐ.எஸ் இயக்கம் தனது இயக்கத்தினருக்கு பயங்கர தகவல் அடங்கிய வீடியோவை வெளியிட்டுள்ளது.

“உங்கள் வேலையை வெறுக்காதீர்கள். இஸ்லாமிய நாடுகளுக்கு போக முடியாத ஐரோப்பியாவிலிருக்கும் இஸ்லாமிய சகோதரர்கள், மக்கள் இருக்கும் வீடுகளில், வீதிகளில், சந்தைகளில் அவர்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டும்.

மேலும், அப்பாவிகள் எனக் கூறப்படும் மக்கள் மீது நீங்கள் நடத்தப் போகும் தாக்குதல் மிகப் பயனுள்ளதாக இருக்கும். இது ரம்ழான் வெகுமதியாக இருக்க வேண்டும் எனவும் அந்த வீடியோவில் கூறப்பட்டுள்ளது.

கடந்த திங்களன்று நடந்த தாக்குதல் போலவே மீண்டுமொரு தாக்குதல் அதே நபர்களால் நடத்தப்படலாம் என பிரிட்டன் பாதுகாப்புத்துறை கூறியுள்ள நிலையில், ஐ.எஸ் வெளியிட்டுள்ள இந்த வீடியோ மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஓ)

## ரஜினியின் அரசியல் வருகை


# தனியான கட்சி அமைப்பார்

“ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவது உறுதி. அவர் தனக்கென தனியான கட்சி தொடங்குவார்” என ரஜினியின் சகோதரர் சத்திய நாராயணன் முதல் முதலாக தெரிவித்துள்ளார்.

“ரஜினிகாந்த் அரசியலுக்கு வர வேண்டும் என்பது மக்கள் விருப்பமாகும். இது தொடர்பாக அவர் தனது ரசிகர்களுடனும், தனது நலன்விரும்பிகளான நண்பர்களுடனும் ஆலோசனை நடத்தி வருகிறார். தற்போது முதல் சுற்று ஆலோசனையை அவர் முடித்துள்ளார்.

அடுத்த மாதம் (ஜூன்) மீண்டும் ரசிகர்களை சந்தித்து இரண்டாம் சுற்று ஆலோசனை நடத்தவுள்ளார். அதன் பிறகே அவர் தனது முடிவை வெளியிடுவார்.” என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கமல் ஆதரவு



“தமிழ் உணர்வுள்ள யார் வேண்டுமானாலும் தமிழகத்தை ஆளலாம்” என்று கூறியுள்ள நடிகர் கமல்ஹாசன், மறைமுகமாக ரஜினியின் அரசியல் வருகையையும் ஆதரித்துள்ளார்.

விஜய் தொலைக்காட்சியில் ‘பிக் பாஸ்’ நிகழ்ச்சியை கமல்ஹாசன் தொகுத்து வழங்கவுள்ளார். அந்த நிகழ்ச்சி தொடர்பான டீசர் வெளியீடு சென்னையில் நேற்று நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

“இப்போது இருக்கும் அரசியல் நிலைவரங்களை பார்க்கையில் யாருமே அரசியலுக்கு வரக்கூடாது என்று நினைக்கிறேன். அதே வேளை, தமிழ் உணர்வோடு இருப்பவர்கள் யார் வேண்டுமானாலும் தமிழகத்தை ஆளலாம்.

“நேரு தமிழனா..?, சுபாஷ் சந்திரபோஸ் தமிழனா..? ஆனால் போஸ் என்ற பெயரில் எங்கள் ஊரில் பலர் இருக்கிறார்கள். காந்தி என்ற பெயரில் இந்தியாவின் பல ஊர்களிலும் பலர் இருக்கிறார்கள். அதை ஒரு பெரிய விடயமாக எடுத்துக்கொள்ளமாட்டேன்” என அவர் மேலும் தெரிவித்தார். (ஓ)

# ரயில் நிலையத்தை திருமணம் முடித்த பெண்



உலகில் எத்தனையோ நூதன நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் தான் நேசித்த ரயில் நிலையத்தை காதலித்து ஒரு பெண் திருமணம் செய்து கொண்ட சம்பவம் நடந்தேறியுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவைச் சேர்ந்த 45 வயதுடைய கரோல் சான்டே பி என்வரே இவ்வாறு செய்தள்ளார்.

இவரது வீட்டில் இருந்து 45 நிமிட பஸ் போக்குவரத்துத் தூரத்தில் உளள ரயில் நிலையத்தின் மீது கரோலுக்கு 9 வயதில் இருந்தே தனி அன்பும் ஈர்ப்பும் ஏற்பட்டது. அதுவே பின்னர் காதலாக மாறியது. (எ)

# இலங்கை தோல்வி



இலங்கைக்கு எதிரான பயிற்சியாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி த்ரில் வெற்றிபெற்றுள்ளது.

சம்பியன் கிண்ணத் தொடருக்கு முன்னர் நடைபெற்றுவரும் பயிற்சியாட்டங்களில் அணிகள் பங்கேற்று வருகின்றன.

இதன்படி நேற்று ஓவல் மைதானத்தில் நடைபெற்ற பயிற்சியாட்டம் ஒன்றில் இலங்கை - அவுஸ்திரேலிய அணிகள் களம் கண்டன.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, மத்யூஸ் (96), குணரத்ண (70*) ஆகியோரின் அரைச்சதம் கைகொடுக்க 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 318 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் வெற்றியிலக்கைத் துரத்திய அவுஸ்திரேலிய அணி, பிஞ்சின் சதமும் (137), ஹெட் ஆட்டமிழக்காது விளாசிய 85 ஓட்டங்களும் வலுச்சேர்க்க 8 விக்கெட்டுகள் இழந்த நிலையில் கடைசி ஓவரின் நான்காவது பந்தில் வெற்றியிலக்கைத் (319) தொட்டு வெற்றிபெற்றது. (ஐ)

# ‘தொண்டன்’ பார்த்து தொண்டாற்றும் ரசிகர்கள்




சமுத்திரக்கனியின் நடிப்பு, இயக்கத்தில் வெளிவந்திருக்கும் ‘தொண்டன்’ படத்தை சென்னை உதயம் திரையரங்கில் பார்க்க வந்த பொதுமக்களுக்கு ரசிகர்கள் இலவச நீர், மோர், இளநீர் கொடுத்து அசத்தியுள்ளனர்.

நேற்று வெளிவந்த ‘தொண்டன்’ படத்தில் விக்ராந்த், சுனைனா, கஞ்சா கருப்பு, சூரி உள்ளிட்டோரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இப்படத்தின் மீதான விமர்சனம் எல்லோரும் பாராட்டும்படியாகவே அமைந்திருக்கிறது. ‘அப்பா’ படத்துக்குப் பிறகு சமுத்திரகனி இயக்கம் மற்றும் நடிப்பில் வெளிவந்திருக்கும் படம் என்பதால் இப்படத்தின் மீதான ரசிகர்களின் எதிர்பார்ப்பும் அதிகமாகவே இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## மீட்புப் பணியில்

# சிப்பாய் மரணம்

இயற்கையின் சீற்றத்தில் சிக்கிய பெண்ணொருவரை காப்பாற்ற முனைந்த விமான படை சிப்பாயான வை. எம்.எஸ். யாப்பா ரத்ன (வயது - 38) உயிரிழந்துள்ளார். காலியில் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப் பட்டவர்களை காப்பாற்றும் நடவடிக் கையில் ஈடுப்பட்ட போது, ஹெலிகொப்டரில் இருந்து கீழே வீழ்ந்த நிலை யில் காயமடைந்த இந்த விமா னபடை சிப்பாய்வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டடிருந்தார். இந்நிலையில் சிகிச்சை பல னின்றி அவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## தாய் நாட்டுக்காக பிரார்த்தியுங்கள்

# தினேஷ் சண்டிமால் உருக்கம்



“இலங்கையில் இருந்து ஒரு சோகமான செய்தி வந்திருக்கிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் மக்கள் பெரும் துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர். அவர்களுக்காக நான் பிரார்த்தனை செய்து கொள்கிறேன். என்னுடைய தாய் நாட்டுக்காக பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்” என இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் தினேஷ் சண்டிமால் தனது டுவிட்டர் பக்கத்தில் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கருத்தரங்கு

‘சொந்த ஒரு வயலுக்காக - தென்னாசியாவில் பால்நிலையும் நில உ ரிமையும்’ என்ற தலைப்பில் கருத்தாடல் நிகழ்வு ஒன்று இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கொக்குவிலில் உள்ள தேசிய கலை இலக்கிய கூடத்தில் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இதில் நியந்தினி கதிர் காமர் அறிமுகவு ரையை நிகழ்த்த உள்ளார். (அ)

## கலந்துரையாடல்

‘சிங்கள பௌத்தத் தலை மைகளின் இராஜதந்தி ரத்தை வெற்றி கொள்ளும் திறன் தமிழ்த் தலைமை களுக்கு உண்டா?’ எனும் தலைப்பிலான கருத்து ரையும், கலந்துரையாட லும் யாழில் இடம்பெற வுள்ளது. தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்கான செயற் பாட்டு மையத்தின் ஏற் பாட்டில் குறித்த கலந்துரையாடல் யாழ். குப்பிளான் அறிவொளி சனசமூக நிலைய மண்ட பத்தில் நாளை பிற்பகல் 2.30 மணியளவில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை முன்வைக்குமாறு வேண்டுகோள் விடுக் கப்பட்டுள்ளது. (ஊ)

## இன்றைய கருத்தோவியம்




# அரசாங்கத்தை நம்புகின்றோம்



‘அரசாங்கம் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டு வதாக வாக்குறுதி அளித்திருக்கின்றது. அதனை நாம் இன்னும் நம்புகின்றோம்’ என அமைச்சர் றிஷாட் பதியூதீன் தெரிவித்துள்ளார். முஸ்லிம்களின் சமகால பிரச்சினை, சமூகங்களுக்கிடையிலான நல்லுறவு, தொடர்பான கருத்தரங்கு குருநாகல் கண்டி றிச் ஹோட்டலில் நேற்று மாலை நடைபெற்றது. அங்கு உரையாற்றிய அவர், “அரசாங்கம் சட்டத்தையும் ஒழுங் கையும் நிலைநாட்டுவதாக வாக்குறுதி அளித்திருக் கின்றது. அதனை நாம் இன்னும் நம்புகின் றோம். முஸ் லிம் சமூகம் பொறுமையை கடைப்பிடிப்பதுடன் எதிர் வினைகளுக்கு ஆட்படாமல் ஒற்றுமையாக வாழ்வதன் மூலம் இந்தப்பிரச்சினைக்கு முடிவு கட்டலாம்” என்றார். (உ)

## குத்துக்கரண ஓட்டோ



செங்கலடி- பதுளை வீதியில் பய ணித்துக்கொண்டிருந்த ஓட்டோ ஒன்று நேற்று தலைகீழாகக் கவிழ்ந்ததில் இருவர் காயமடைந்தனர். குறித்த ஓட்டோ தனது கட்டுப் பாட்டை இழந்ததன் காரணமாகவே கொடுவாமடு பிரதேசத்தில் விபத்தில் சிக்கியது. இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த இருவரும் சிறு காயங்களோடு தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.(ஆ)

# மலையக மாணவர்களுக்கு இந்தியா புலமைப்பரிசில்

இலங்கையிலுள்ள இந்திய தோட்ட தொழிலாளர் களின் மாணவர்களுக்கு இந்திய அரசாங்கம் புலமைப்பரிசில்களை வழங்கவுள்ளது. பெருந்தோட்டத்தில் வாழும் மாணவர்களிட மிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டிருப்பதாக கொழும்பி லுள்ள இந்திய உயர்ஸ் தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது. கல்விப் பொதுத்தராதரம் உயர்தர பட்டப்படிப்பு , தொழில் கல்வி , தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றுக்காக இந்த புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. (ஊ)

# மூழ்கிப் போன மகிந்தவின் கோட்டை

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள பெரும் இயற்கை அனர்த்தம் காரணமாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சொந்த ஊரான தங்காலையும் முற்றாக நீரில் மூழ்கியுள்ளது. அந்தப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் விகாரைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் ஷிரந்தி ராஜபக்ச, பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல்



கூறியதுடன் தேவையான அத்தியாவசிய பொருட்களையும் வழங்கி வைத்தார்.(அ)

## அம்மனுக்கு நேர்த்தி



தும்பளை - நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த வேள்வித் திருவிழா நேற்று நடைபெற்ற போது நேர்த்திக்கடனுக்காக ஆலயத்துக்கு வழங்கப்பட்ட ஆடுகளும் கோழிகளும்...

# கொடுப்பனவு கோரல்

வட மாகாண அமைச்சர் கள் தொடர்பில் மேற் கொண்ட விசாரணைக் குழுவில் அங்கம் வகித்த வர்களுக்கான மொத்தக் கொடுப்பனவாக 3 லட் சத்து 15 ஆயிரம் ரூபா அனு மதி கோரப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு முதல மைச்சரினால் நியமிக்கப் பட்ட விசாரணைக் குழு தமது அறிக்கையினை கடந்த 19ஆம் திகதி வட மாகாண முதலமைச்சரி டம் கையளித்திருந் தது. (உ)

# மன்னாரில் 3 விடுதிகள் திறப்பு

ஆசிய அபிவிருத்தி வங்கி யின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 21 மில்லியன் ரூபா செல வில் அமைக்கப்பட்ட மன் னார் மாவட்ட வீதி அபி விருத்தி திணைக்களத்தின் நிறைவேற்றுப் பொறியி யலாளர் விடுதியும் தொழில்நுட்ப உத்தி யோகத் தர்களுக்கான தனிநபர் விடுதி களுமாக மூன்று தங்கும் விடுதிகள் நேற்று வெள்ளிக் கிழமை மதியம் வைபவ ரீதி யாக திறந்து வைக்கப்பட் டன. வடக்கு மாகாண வீதி அபிவி ருத்தி அமைச் சர் பா.டெ னிஸ்வரன் பிரதம விருந் தினராக கலந்து கொண்டு திறந்து வைத் தார். (ஆ)



## நாளை நாளும் கோளும்

28.05.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் வைகாசி மாதம் 14ஆம் நாள்

திருதியை மு.இ. 07.02 வரை   திருவாதிரை மு.இ. 08.16 வரை   சித்தயோகம்   அக்கினிநாள் முடிவு

இராகுகாலம் 04.22-05.52   சுபநேரம் 08.52-10.22   எமகண்டம் 11.52-01.22

**கொடியேற்றம்**
- சங்கானை வெல்வில் சுப்பிரமணியர்
- வட்டுமேற்கு சின்னக்கதிர்காமம்
- இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் - தேர்

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முயற்சி | ஓய்வு | மேன்மை | அசதி | யோகம் | புகழ் | நட்பு | போட்டி | நட்டம் | வரவு | வெற்றி | தனம் |

எதிரொலி
Ethiroli

திவிநெகும திணைக்களத்தில்

# 1,000 பட்டதாரிகளுக்கு நியமனம்



வட மாகாணத்தில் போராட்டத்தில் ஈடுபடும் வேலையில்லாப் பட்ட தாரிகளுள் 1000 பேருக்கு திவிநெகும திணைக்களத் தின் ஊடாக வேலை வாய்ப்பு வழங்கப்படவுள் ளது. இது தொடர்பில் ஜனாதிபதி தமக்கு உறுதியளித்துள்ளதாக, வடமாகாண முதலமைச் சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இந்த வேலைவாய்ப்பு குறித்து ஏற்கனவே ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டபோதும், அதனை வழங் குவதில் தாமதம் ஏற்பட் டுள்ளது. இது குறித்து ஆராய்வதாக வும் ஜனாதிபதி தெரிவித் ததாக முதலமைச்சர் குறிப்பிட்டுள் ளார். (எ)

# பாகிஸ்தான் பிரஜை கைது



சுமார் ஒன்றரைக் கோடி பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று இரவு ஒன்றரைக் கிலோ ஹெரோயினுடன் அவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்து செய்யப்பட்டதாக சுங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ)

# அந்த நாள் ஞாபகம்.....!



**1960.05.27**

துருக்கியில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் போது அப்போதைய ஆட்சியாளராக இருந்த செலால் பயார் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.



திருமறைக் கலாமன்ற மாணவர்களின் சிற்பக் கண்காட்சி இன்று ஆரம்பமானது.

# 100 ஆவது நாளில் சர்வமதப் பிரார்த்தனை



வடக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர் களுடைய உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் போராட்டத்தின் நூறாவது நாளில் மாபெரும் சர்வ மதப் பிரார்த்தனை கிளி நொச்சியில் இடம்பெறவுள் ளது.

குறித்த நிகழ்வில் அனைத்து மாவட்டத்தில் இருந்தும் உற வுகள் அனைவரும் எதிர் வரும் 30 ஆம் திகதி காலை 9 மணி யளவில் கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலில் ஒன்று கூடுமாறு காணாமல் போனவர் களுடைய உறவினர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

புத்தரைக் கண்டுகொள்ளாமையே

# அனர்த்தத்துக்கு காரணம்

"புத்த மதத்தினை கண்டுகொள்ளாமல் இருப்பதே சீரற்ற காலநிலையால் ஏற் பட்டுள்ள வெள்ள அனர்த்தத்திற்கு கார ணமாகும்" என பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள் ளார். நாட்டில் தற்போது அதர்ம ஆட்சி நில வுகின்றது. அதனால்தான் இவ்வாறான அனர்த் தங்கள் இடம்பெறு கின்றன.

எனவே போலித் தெய் வங்களிடம் குறைகளைக் கூறாமல் அனர்த்தம் நேரக் கூடாது என உண் மைத் தெய்வமான புத்த பெருமானை பிரார்த் தனை செய்ய வேண்டும்" என்றும் அவர் நாட்டு மக்களை கேட்டுக் கொண்டுள்ளார். (எ-4)

60 லட்சம் ரூபாவுக்கு

# நூல்கள்

இந்திய அரசாங்கத்தி னால் யாழ். பொதுநூ லகத்துக்கு 60 லட்சம் ரூபா பெறுமதியான நூல் கள் அன்பளிப்புச் செய் யப்படவுள்ளன.

எதிர்வரும் 31 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு இலங்கைக்கான இந்திய தூதுவர் வை.கே.சிங் இந்த நூல்களை யாழ். பொதுநூலகத்துக்கு அன்பளிப்புச் செய்யவுள் ளார்.

இந்திய மக்களினால் யாழ்ப்பாணம் பொதுநூ லகத்துக்கென அன்பளிப் புச் செய்யப்பட் டுள்ள சுமார் 16 ஆயிரம் நூல்கள் அன்றைய தினம் நன் கொடையாக வழங்கி வைக்கப்படவுள்ளன. (அ)

# சுற்றுச் சூழல் தினம் அனுஷ்டிப்பு

இயற்கையை மக்களுடன் இணைத்தல் எனும் தொனிப் பொருளில் சுற்றுச்சூழல் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. ஜூன் 1 முதல் 6 வரை பல்வேறு செயற் றிடங் கள் பிரதேச மட்டங்களில் முன்னெடுக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-6)

# உதவி

சமூக சேவைகள் திணைக்களத்தினால் மாற்றுவலுவுடையோருக்கான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கென மாற்றுவலு தொடர்பான விவரங்களை யாழ்.மாவட்டச் செயலகம் சேகரித்து வருகின்றது. பயனாளிகள் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-6)

# விண்ணப்பம்

வலி.மேற்கில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் தையல் வகுப்பு நடத்தப்படவுள்ளது. இதற்கான தகுதி வாய்ந்த போனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்ப்பதாக வலி. மேற்கு கிராம அபிவிருத்தித் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது. (உ-6)



புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தின் புதிய வகுப்பறைகளும் கேட் போர் கூடங்களும் இன்று வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வினால் திறந்து வைக்கப்பட்டன. (அ -11)

# பொலிஸாரின் விடுமுறைகள் இரத்து

விடுமுறையில் இருகின்ற சகல பொலிஸாரையும் உடனடியாக கடமைக்கு திரும்புமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை மறு அறிவித்தல்வரை சகல பொலிஸாரினது விடுமுறைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையைக் கருத்திற்கொண்டு மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக குறிப் பிடப்பட்டுள்ளது. (எ)

# சுனாமியில் மாண்டவர்களுக்கு நினைவுத்தூபி

"சுனாமியில் மாண்டவர்களுக்காக முள்ளியவளை கயட்டைப் பகுதியில் நினைவுத்தூபி அமைப்பதற்கு தற்காலிக அனுமதி கிடைத்துள்ளது "என்று கரைத்துறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

குறித்த காணி வனவளத் திணைக் களத்தின் ஆளுகையில் உள்ளது. அவ்விடத்தில் சுனாமியில் மாண்டோ ருக்கான நினைவாலயம் அமைக்கப்பட வேண்டும் என்று உறவினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

'கயட்டைப் பகுதியில் சுனாமியில் உயிரிழந்தவர்கள் புதைக்கப்பட்ட இடத்தை விடுவித்து தரும்படி வேண்டுகோள் ஒன்று விடுத்திருக்கின்றோம். இதுவரை முழுமையான அனுமதிகள் எமக்கு கிடைக்கவில்லை. ஆயினும் நினைவுத்தூ பியை அமைப்பதற்கு ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளுக்காகத் தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளது' என்று கரைத்துறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (அ)

## பலி 100+... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் ஏற்பட்ட பேரனர்த்தமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த இரு தினங் களாக தென்னிலங்கையிலும், மலையகத்தி லும் கொட்டித்தீர்த்துவரும் அடைமழை யால் கொழும்பு, களுத்துறை, மாத்தறை, காலி உள்ளிட்ட மாவட்டங்கள் வெள்ளத் தில் மூழ்கியுள்ளன.மலையகத்தில் பரவலாக பல இடங்களிலும் மண்சரிவுகள் நிகழ்ந்துள் ளன.தொலைதொடர்பு சேவைகளும் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளன. குடிதண்ணீருக்காக மக்கள் அலைந்து திரிகின்றனர். பாதைகள் சிதைவடைந் துள்ளமையால் நிவாரணப் பொருள்கள் மக்களைச் சென்றடைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இன்று முதல் 30 ஆம் திகதி வரை தொடர்ந்தும் கடும் மழை பெய்யக்கூடிய சாத்தியங்கள் இருப்பதால் இந்தப் பேரிடரின் பாதிப்பு அதிகரிக்கும் என அச்சம் தோன்றியுள்ளது.

நில்வள கங்கை, களனி கங்கை என்பன பெருக்கெடுத்துள்ளதால் இன்னும் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் நிலை தோன்றியுள்ளது. "சுற்றுநிருபங்களை கணக்கெடுக்காமல் சகலரும் மக்களைக் காப்பாற்ற களமிறங்க வேண்டும்" என ஜனாதிபதி மைத்திரி அறைகூவல் விடுத்துள்ளார். (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 27.05.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.